# தஞ்சாவூர் மாநகராட்சி

## தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள்(ம) மாத உரிம இனங்களுக்கான மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**(ந.க.எண்.9031/2023/எம்சிஎ3)**

தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் (ம) மாத உரிம இனங்கள் மாநகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள 2024 – 2027 ஆண்டின் குத்தகை பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகளுக்குட்பட்டும் மாநகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 03.07.2024 **புதன் கிழமை** காலை 11.00 மணி முதல் 11.30 மணி முடிய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. அன்றைய தினம் காலை 12.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தின் ஆணையாளரால்அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பொது ஏலம் நடைபெறும். பொது ஏலம் முடிந்த பின்னர் வந்திருக்கும் ஏலதாரர் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர விரும்புவோர்கள் அட்டவணையில் கண்டுள்ள ஆண்டு குத்தகை மற்றும் மாத உரிம இனத்திற்கு அதன் எதிரே நிர்ணயம் செய்துள்ள வைப்புத்தொகையை ஆணையர், தஞ்சாவூர் மாநகராட்சி **(The Commissioner, Thanjavur City Municipal Corporation)** என்ற பெயரில் தஞ்சாவூரில் காசாக்கப்படும் விதமாக வங்கி வரைவோலையாக மட்டும், **ஆதார் நகல், பான் கார்டு, GST எண் மற்றும் புகைப்படம்** ஏலம் நடப்பதற்கு முதல் நாள். 02.07.2024 **செவ்வாய் கிழமை** அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஏலம் கோர விரும்புவோர்கள் **ஒரு இனத்திற்கு அதற்கான வைப்புத்தொகைக்கான வரைவோலை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு இனத்திற்கு செலுத்திய வைப்புத்தொகையை அடுத்த இனத்திற்கு ஏலம் கோர இயலாது. ஏலம் கோரும் ஒவ்வொரு இனத்திற்கும் அதற்குரிய வைப்புத்தொகைக்கான வரைவோலை தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும்.** மாமன்றத்தால் ஏலம் உறுதி செய்யப்பட்ட நபர்கள் ஒரு வருட உரிமத்தொகையினை உடனடியாக மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும்.

நிர்வாக காரணங்களால் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை ஒத்தி வைக்க மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் உண்டு. ஏலம் உறுதியான உடனேயே ஏலத்தொகை முழுவதையும் அலுவலகத்திற்கு செலுத்திய பிறகே உரிமம் உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான சந்தேகங்களை அலுவலக பணி நாட்களில் பணி நேரங்களில் நேரில் கேட்டு தெரிவித்து கொள்ளலாம். உரிமம் உறுதி செய்யப்பட்டதும் ஏலதாரர்கள் ஏல உரிமத்தொகையும் அரசு நிர்ணயம் செய்யும் (GST) சரக்கு வரி, சேவை வரி மற்றும் வருமான வரி தனியாக செலுத்த வேண்டும்.

மேற்படி பகிரங்க பொது ஏலம் மற்றும் ஏல இனங்கள் குறித்த விவரங்களை தஞ்சாவூர் மாநகராட்சியின் https://www.tnurbantree.tn.gov.in/thanjavur/ என்ற இணையதளத்தின் வாயிலாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் மட்டும் வருவாய் பிரிவில் நேரடியாகவோ தெரிந்து கொள்ளலாம்.

| வ. எ ண் | ஏலஇனத்தின் பெயர் | ஏலபொறுப்பு தொகை ஒரு இனத்திற்கு ரூ | சொத்துமதிப் பு சான்று | சொத்து மதிப்பு சான்று அல்லது கூடுதல் வைப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருவள்ளுவர் திரையரங்கம் கடை எண் (1)<br>தரை தளம் – 5522 ச.அ<br>முதல் தளம் –5525 ச.அ<br>இரண்டாம் தளம் –5522 ச.அ | 2.00 கோடி | 5.00 கோடி | 1.00 கோடி |
| 2. | திருவள்ளுவர் திரையரங்கம் கடை எண் (2)<br>தரை தளம் – 16322 ச.அ<br>முதல் தளம் –18430 ச.அ<br>இரண்டாம் தளம் –38893 ச.அ | 5.00 கோடி | 5.00 கோடி | 1.00 கோடி |
| 3. | திருவள்ளுவர் திரையரங்கம் கடை எண் (3)<br>முதல் தளம் –10320 ச.அ | 1.00 கோடி | 2.00 கோடி | 1.00 கோடி |
| 4. | காந்திஜி வணிக வளாகம் கடை எண் (2)<br>[மையப் பகுதி கட்டிடம்]<br>அடித்தளம் – 6660 ச.அ<br>தரை தளம் – 5175.56 ச.அ<br>முதல் தளம் – 5175.56 ச.அ | 1.00 கோடி | 2.00 கோடி | 1.00 கோடி |
| 5. | காந்திஜி வணிக வளாகம் கடை எண் (3)<br>[தென் பகுதி கட்டிடம்]<br>அடித்தளம் – 6660 ச.அ<br>தரை தளம் – 6251.56 ச.அ<br>முதல் தளம் – 5175.56 ச.அ | 1.00 கோடி | 2.00 கோடி | 1.00 கோடி |

18/6/24.

ஆணையாளர்
தஞ்சாவூர் மாநகராட்சி

18/6/24